ஆண்டு பட்டிகை வழக்கு எண்.116/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 116/2024 LW- 1 PW- 1

| | |
|---|---|
| Name | : ராமர் (புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : தூங்கன் |
| Village | : நாயக்கன்பட்டி |
| Taluk | : அழகர்கோவில் |
| District | : மதுரை |
| Age | : 27/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of November 2025

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 18.07.2024ம் தேதி நானும், என் மனைவி சிட்டம்மாள் என்பவரும் என் மாமனார் ஊரான கொரசனம்பட்டியில் இருந்து எங்கள் ஊரான நாயக்கன்பட்டிக்கு எனக்கு சொந்தமான TN 59 CT 6075 என்ற பதிவு எண் கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். நத்தத்திலிருந்து மதுரை செல்லும் பைபாஸ் சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சுமார் மாலை 4.00 மணியளவில் சென்று கொண்டிருந்தபோது 2 நபர்கள் இருசக்கர வாகனத்தில் எங்கள் பின் பக்கத்தில் இருந்து முன் பக்கமாக வந்து மறித்து தேனி, உசிலம்பட்டிக்கு வழி கேட்டார்கள். அவர்களிடம் திண்டுக்கல் வழியாக செல்லுமாறு சொல்லிவிட்டு நாங்கள் போய்க் கொண்டிருந்தோம். அப்போது திடீரென எங்களை நோக்கி மீண்டும் அவர்கள் இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்ததால் நாங்களும் வேகமாக சென்றோம். அப்போது மாலை 4.20 மணியளவில்

பள்ளப்பட்டி மேம்பாலத்தில் நாங்கள் சென்றபோது அவர்கள் எங்களை வழிமறித்துவிட்டார்கள். அந்த வாகனத்தின் பின்புறம் அமர்ந்திருந்த அந்த நபர் என் வாகனத்தின் சாவியை தூக்கி பாலத்தின் கீழே எறிந்துவிட்டு என் மனைவியின் கழுத்தில் இருந்த 2 பவுன் தங்க செயினை பறித்துக் கொண்டு மீண்டும் இருவரும் அதே இருசக்கர வாகனத்தில் வடக்கு நோக்கி சென்றுவிட்டார்கள்.

2. நான் அக்கம் பக்கத்தில் வந்தவர்களிடம் உதவி கேட்டேன். பின்னர் அவர்களுடன் இருசக்கர வாகனத்தில் அந்த இரு நபர்களையும் துரத்தி சென்றும் அவர்களை பிடிக்க முடியவில்லை. அவர்கள் திண்டுக்கல் வழியாக சென்றுவிட்டார்கள். அவர்கள் வந்த இருசக்கர வாகனம் கருப்பு கலர் Yamaha FZ வாகனம் ஆகும். அதில் பதிவு எண் இல்லை. அந்த வாகனத்தில் பின்புறம் அமர்ந்திருந்த நபர் ஒல்லியாகவும், கருப்பு சட்டை, கருப்பு பேண்ட் அணிந்திருந்தார். வாகனத்தை ஓட்டிய நபர் சற்று குண்டாகவும், வெள்ளை சட்டை அணிந்து அதன் மேல் கருப்பு கோட் அணிந்து, தலைக்கவசம் அணிந்திருந்தார். பின்னர் எங்கள் வீட்டிற்கும், என் மாமனார் வீட்டிற்கும் தகவல் சொல்லிவிட்டு கர்ப்பிணியாக இருந்த என் மனைவி சிட்டம்மாள் மயக்க நிலையில் இருந்ததால் மீண்டும் என் மாமனார் ஊரான கொரசனம்பட்டிக்கு சென்றுவிட்டோம். பின்னர் மறுநாள் மாலை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் மனு அ.த.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்னர் 2 நாட்கள் கழித்து என்னை அழைத்து விசாரித்தபோது நடந்த விபரங்களை நான் தெளிவாக சொன்னேன். பின்னர் செயினை பறித்தவர்களை கண்டுபிடித்ததாக 7 அல்லது 10 நாட்களுக்குள் போலீசார் என்னை அழைத்தார்கள். அதன்பேரில் நான் காவல் நிலையம் சென்றபோது போலீசார் செயினை என்னிடம் காட்டி அடையாளம் கேட்டார்கள். நான் ஆமாம் என்று சொன்னேன். அதேபோல் அங்கிருந்த 2 நபர்களை அடையாளம் கேட்டார்கள். சம்பவத்தன்று செயினை பறித்த நபர்கள் அவர்கள்தான் என்று நான் அடையாளம் காட்டினேன். போலீசார் அந்த

நபர்களை விசாரித்தபோது வாகனத்தை ஓட்டிய நபரின் பெயர் முகமது ராஜா என்றும், பின்னால் அமர்ந்திருந்த நபர் சேதுபதி என்றும் சொன்னார்கள்.

4. ஆஜர் எதிரிதான் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்து முகவரி கேட்டு, அதன் பின்னர் என் மனைவியிடமிருந்து செயினை பறித்த சேதுபதி ஆவார். காவல் நிலையத்தில் நான் பார்த்தபோது சேதுபதி என்பவர் நெஞ்சில் பச்சை குத்தி இருந்தார். நான் எனது மனைவியின் செயினை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன். தற்போது நான் நீதிமன்றத்திற்கு செயினை கொண்டு வரவில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் என் மனைவியின் செயின் ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

5. எனது மாமனார் ஊருக்கு எதற்காக சென்றேன் என்றால், விசேஷம் இருந்ததால் அதில் கலந்து கொள்ள சென்றேன் என்ன விசேஷம் என்றால் எனது மனைவியின் உறவினரின் மாமா மகளுக்கு காதுகுத்து விசேஷத்திற்கு சென்றிருந்தோம். யாருடைய விசேஷ வீட்டில் கலந்து கொண்ட நபரின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. விசேஷத்திற்கு பத்திரிக்கை அடித்தார்களா என்றால் தெரியாது, ஆனால் விசேஷ வீட்டிற்கு அழைப்பானது போனில் சொன்னாரகள். நான் எனது முதல் விசாரணையில் சொல்லிய விபரங்களான முகவரி கேட்டு அதன் பிறகு விரட்டி வந்து செயினை பறித்து சென்றது குறித்த விபரங்கள் அனைத்தையும் புகார் மனுவில் சொன்னேனா என்றால் சொன்னேன்.

6. எனக்கு எழுதப் படிக்க தெரியுமா என்றால் தெரியும். புகாரை நான் தான் எழுதினேனா என்றால் ஆமாம். இந்த விவரங்கள் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ளதா என்றால் உள்ளது. புகார் மனுவில் அவ்வாறு இல்லை என்று சொன்னால் சரியல்ல. புகாரை எங்கு வைத்து எழுதினேன் என்றால் காவல்நிலையத்தில் வைத்து எழுதினேன். புகார்

கொடுக்க சென்றபோது என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் எனது மாமனார் வெள்ளையாண்டி, உறவினர் ரஞ்சித் ஆகியோர் இருந்தார்கள். புகாரை சார்பு அவர்களிடம் கொடுத்தேன். எனக்கு காவல் ஆய்வாளருக்கும், சார்பு ஆய்வாளருக்கும் வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியாது, காவல் நிலையத்தில் இருந்த உயர் அதிகாரியிடம் கொடுத்தேன்.

7. எனது மாமனார் மற்றும் ரஞ்சித் ஆகியோரிடம் சாட்சி கையொப்பம் எதுவும் போலீசார் வாங்கினார்களா என்றால் இல்லை. மற்றொரு எதிரியான ராஜா முஹம்மது என்பவரை முகத்தை பார்க்காததால் அவரை அடையாளம் காட்ட இயலாது என்றால் சரிதான், உருவத்தை மட்டும் பார்த்தேன். போலீசார் முகமது ராஜா என்று சொன்னதை வைத்துதான் எதிரி என்று தெரியும் என்றால் சரிதான். அதேபோல் தான் ஆஜர் எதிரியையும் போலீசார் அடையாளம் காட்டி எதிரி என்று சொன்னதை வைத்து அவரை எதிரி என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல, நான் அவரை பார்த்ததால் அடையாளம் கண்டு சொல்கிறேன். புகாரில் எதிரிகளின் அங்க அடையாளங்களோ, அவர்கள் அணிந்து இருந்த ஆடை பற்றிய விபரங்கள் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என்று புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

8. செயினை அத்ததில் எனது மனைவிக்கு கழுத்தில் காயம் ஏதும் ஏற்பட்டதா என்றால் இல்லை. செயின் அந்து போய்விட்டது என்றால் சரிதான். தற்போது காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் அறுந்த நிலையில் இல்லை என்றால் சரியல்ல. செயினை என்னிடம் ஒப்படைக்கும் பொழுது செயினை மாற்றவோ விற்கவும் கூடாது என்ற நிபந்தனையுடன் தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தற்பொழுது அந்த செயினை கொண்டு வரவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் எந்த விதமான மாடல் செயின் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் எனது மனைவியின் செயின் வேறு எங்கோ காணாமல் சென்று விட்டது என்றாலும்,

இவ்வாறு கொடுத்தால்தான் செயின் கிடைக்கும் என்று போலீசார் சொல்லிக் கொடுத்ததன் பேரில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. புகார் கொடுத்த இரண்டு நாட்களில் போலீசார் என்னை மட்டும்தான் போலீசார் விசாரித்தார்கள் என்றால் என்னையும், என் மனைவியையும் விசாரித்தார்கள். என்னை நேரில் அழைத்து காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் எனது மனைவியை செல்போன் வழியாக பேசி விசாரித்தார்கள். மற்ற யாரையும் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். புகார் மனுவில் எதிரிகள் Yamaha FZ வண்டியில் வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். காணாமல் போன செயினின் எடை இரண்டு பவுன் என்றாலும் நீதிமன்றத்தில் இருந்து பெற்று சென்ற செயினின் அளவு 240 மி.கிராம் குறைவாக பெற்றுச் சென்றேன் என்றால் சரிதான்.

10. தற்போது என்னிடம் காட்டப்படும் மனுவின் பேரில்தான் நான் நீதிமன்றத்தில் நகையை பெற்றுச் சென்றேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் நகை எவ்வாறு காணாமல் போனது என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, குற்ற எண். குறிப்பிட்டுள்ளேன். அதேபோல் எனது அபிடவிட்டில் தங்க நகையை உருமாற்றம் செய்யமாட்டேன் என்றும், நீதிமன்றம் கோரும்போது நகையை முன்னிலைப்படுத்த தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

11. உண்மையில் என் மனைவி தான் நகையை வேறு எங்கோ தொலைத்து விட்டார் என்றாலும், எங்கு தொலைத்தார் என்று தெரியாத காரணத்தால் காவல் நிலையத்தில் சொன்னபோது புகார் மனுவை மாற்றி எழுதி தர சொன்னார்கள் என்றால் சரியல்ல. உண்மையில் நகையை அத்திருந்தால் நகை அறுந்த நிலையில் இருந்திருக்கும் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்திலிருந்து பெற்று சென்ற நகை என்னுடையது இல்லை என்றாலும் வேறு யாருடைய நகை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும்

**சம்பந்தம் இல்லை என்றாலும், போலீசார் காட்டிதான் எதிரியை தெரியும் என்றாலும் சரியல்ல.**

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.11.07 14:26:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 116/2024 LW- 2 PW- 2

| | |
|---|---|
| Name | : சிட்டம்மாள் (பாதிக்கப்பட்ட சாட்சி) |
| Father's/Husband's Name | : ராமர் |
| Village | : நாயக்கன்பட்டி |
| Taluk | : அழகர்கோவில் |
| District | : மதுரை |
| Age | : 25/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of November 2025

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 என் கணவர். ஆஜர் எதிரியை தெரியும். அவர் என் செயினை அத்த நபர் ஆவார். கடந்த 18.07.2024ம் தேதி நானும், என் கணவரும் கொரசனம்பட்டிக்கு ஒரு விசேஷத்திற்கு வந்துவிட்டு மீண்டும் என் கணவர் ஊரான நாயக்கன்பட்டிக்கு என் கணவருடன் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். திண்டுக்கல்லிருந்து மதுரை செல்லும் நத்தம் பைபாஸ் சாலையில் சென்று கொண்டிருந்தபோது, 2 நபர்கள் இருசக்கர வாகனத்தில் எங்கள் பின்புறத்தில் இருந்து வந்து எங்களிடம் தேனி, உசிலம்பட்டி செல்லும் வழி கேட்டார்கள். அவர்களிடம் என் கணவர், அ.சா.1 திண்டுக்கல் சாலையில் செல்ல வேண்டும் என்று வழி சொன்னார். அதனால் அவர்கள் திரும்பி சென்றுவிட்டார்கள். வாகனத்தின் பின்புறம் அமர்ந்தவாறு எங்களுக்கு பின்னால் வேடிக்கை பார்த்துக் கொண்டு சென்றபோது, எதிரிகள் மீண்டும் எங்கள்

பின்னால் வந்தார்கள். அதனால் நான் சந்தேகப்பட்டு என் கணவரிடம் மீண்டும் அவர்கள் அட்ரஸ் கேட்டு வருகிறார்கள், வேகமாக செல்லுங்கள் என்று சொன்னேன். அதன்பேரில் நாங்கள் பள்ளப்பட்டி மேம்பாலத்தில் சென்றபோது அவர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து எங்களின் வாகனத்தை மறித்து நின்றார்கள்.

2. வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்த ஆஜர் எதிரி எங்கள் வாகனத்தின் சாவியை பிடுங்கி கீழே எறிந்துவிட்டு என் கழுத்தில் இருந்த 2 பவுன் தங்க செயினை அத்துக் கொண்டார். வாகனத்தை ஓட்டி வந்த நபர் திண்டுக்கல் சாலையிலேயே வாகனத்தை மீண்டும் திருப்பியதும் ஆஜர் எதிரி அவருடன் இருசக்கர வாகனத்தில் அமர்ந்து சென்றுவிட்டார்கள். பின்னர் எதிரிகளின் வாகனத்திற்கு பின்னால் வேறொரு வாகனத்தில் வந்த ஒருவர் எங்களிடம் ஏன் நிற்கிறீர்கள் என்று கேட்டபோது, தற்போது இருசக்கர வாகனத்தில் வந்த அந்த 2 நபர்களும் செயினை பிடுங்கிக் கொண்டு ஓடுகிறார்கள் என்று சொன்னோம். அந்த நபர்களை விரட்டி என் கணவர் மேற்படி இருசக்கர வாகனத்தில் வந்த நபருடன் சிறிது தூரம் சென்று தேடிவிட்டு காணவில்லை என்று திரும்பி வந்துவிட்டார். அப்பொழுது நான் கர்ப்பமாக இருந்தேன், எனக்கு படபடப்பாக இருந்தது.

3. பின்னர் என் கணவர் என் அப்பாவிற்கு போன் மூலம் நடந்த விபரத்தை சொல்லி என் அம்மா வீட்டிற்கு திரும்பி சென்றுவிட்டோம். மறுநாள் காலையில் என் கணவர் என்னை புகார் கொடுக்க அழைத்தபோது நான் பயந்து கொண்டு செல்ல மறுத்தேன். பிறகு எங்கள் வீட்டில் என்னை சமாதானப்படுத்தியதால் 19.07.2024ம் தேதி மாலை 6.00 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். பின்னர் 7 நாட்கள் கழித்து செயினை பறித்து சென்றவரை அடையாளம் காட்ட போலீசார் அழைத்தன் பேரில் நானும், என் கணவரும் காவல் நிலையம் சென்றோம். அங்கு ஆஜர் எதிரியை பார்த்தோம். அவரை போலீசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது எதிரி

அவர் பெயர் சேதுபதி என்றும், அவருடன் இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் பெயர் முகமது ராஜா என்று சொன்னார். பின்னர் போலீசார் செயினை காட்டினார்கள். நான் அடையாளம் காட்டினேன். அதில் ஒரு வளையம் மட்டும் இல்லை. அந்த செயினை என் கணவர் நீதிமன்றத்தில் மனு செய்து வாங்கி வந்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் என்னுடையதுதான். ஆஜர் எதிரியுடன் வந்த மற்றொரு நபர் சற்று பருமனாக இருப்பார். அவருடைய முகம் எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் என்னை புகார் கொடுத்த அன்றும், பின்னர் எதிரியை அடையாளம் காட்டிய போதும் விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. எதிரி எங்களது இருசக்கர வாகனத்தின் சாவியை உடைத்து பாலத்தில் இருந்து தூக்கி எறிந்து விட்டார். அங்கு வந்த மற்றொரு இருசக்கர வாகனத்தில் என் கணவர் எதிரிகளை விரட்டி சென்றார். போலீசார் விசாரிக்கும்போது இந்த விபரத்தை சொன்னேன். எதிரி மீது என் கணவர் ஹெல்மெட்டை தூக்கி எறிந்த விபரத்தை போலீசார் விசாரிக்கும் போது சொன்னேன். எதிரிகளை விரட்டி செல்ல உதவி செய்த இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. காவல்நிலையத்தில் புகார் கொடுக்க நான், எனது தந்தை, எனது கணவர், எனது தாத்தா வெள்ளாண்டி ஆகியோர் சென்றோம். போலீசார் சொல்ல சொல்ல புகார் என் கணவர் எழுதினார் என்றால் சரிதான். புகாரில் நானும் கையொப்பம் செய்தேன். எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான்.

5. நான் தற்போது சொன்ன விபரங்கள் அனைத்தும் எனது கணவர் புகாரில் எழுதியுள்ளார் என்றால் சரிதான். புகாரில் எந்த மாடல் செயின் என்று எழுதி உள்ளாரா என்றால் இல்லை, இரண்டு பவுன் செயின் என்றுதான் எழுதியுள்ளார். நீதிமன்றத்தில் இருந்து வாங்கி சென்ற செயினின் மாடல் என்ன என்றால்

மாடல் சொல்லத் தெரியாது. செயினை அத்தபோது எனக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. செயின் அறுந்துவிட்டது என்றால் சரிதான். அறுந்து போன நிலையில் தான் போலீசார் செயினை காட்டினார்கள் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் என் கணவர் செயினை வாங்கி சென்ற போது நானும் உடன் வந்தேனா என்றால் இல்லை.

6. உண்மையில் செயினை நான் வேறு எங்கோ தொலைத்து விட்டேன் என்றாலும் காவல் நிலையத்தில் புகாரை இவ்வாறு கொடுத்தால் கண்டுபிடிக்க இயலாது என்று சொல்லி அவர்கள் சொல்லிக் கொடுத்த விதத்தில் புகாரை எழுதிக் கொடுத்தோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் போலீசார் சொல்லிக் கொடுத்து சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து வாங்கி சென்ற செயின் என்னுடையது இல்லை என்றாலும், அது வேறு செயின் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.11.07 14:26:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.116/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 116/2024 LW- 3 PW- 3

| | |
|---|---|
| Name | : ரஞ்சித் (கேள்விப்பட்ட சாட்சி) |
| Father's/Husband's Name | : வெள்ளைச்சாமி |
| Village | : கொரசினம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 33/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of November 2025

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். கடந்த 18.07.2024ம் தேதி அ.சா.1ம், அவரது மனைவியும் நாயக்கன்பட்டியிலிருந்து எங்கள் ஊரில் நடந்த விசேஷத்திற்கு வந்துவிட்டு திரும்பி இருசக்கர வாகனத்தில் சென்றார்கள். பின்னர் அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் அ.சா.1 எனக்கு போன் மூலம் பள்ளப்பட்டி அருகே சென்றபோது 2 நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து மறித்து சிட்டம்மாள் அணிந்திருந்த 2 பவுன் தங்க செயினை பறித்துக் கொண்டு இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டதாக கூறினார்கள். எனவே அவர்களை மீண்டும் எங்கள் ஊருக்கே வருமாறு அழைத்தேன். மறுநாள் அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.1ன் மாமனாருடன் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. அ.சா.1 என்னிடம் வண்டி சாவியை பறித்து தூக்கி எறிந்து விட்டதாக சொன்னாரா என்றால் இல்லை. அவர்கள் என்னிடம் எதிரியை அடையாளம் தெரியும் என்று சொன்னார்களா என்றால் அடையாளம் தெரியும் என்று சொன்னார்கள். எந்த இருசக்கர வாகனத்தில் வந்தார்கள் என்று சொன்னார்களா என்றால் இல்லை. அ.சா.2, எனது மாமா மகள் ஆவார். அன்று அ.சா.2ன் தந்தை வீட்டில் விசேஷம் வைத்திருந்தார். சிட்டம்மாளின் அக்கா பெண்ணிற்கு காதுகுத்து விசேஷம் நடந்தது. நான் அன்று ஊரில் இல்லை. நான் திருப்பூரில் வேலையில் இருந்தேன். புகார் கொடுக்க அவர்களுடன் நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. புகார்தாரர் எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும், நகை காணாமல் போனதுதான் தெரியும் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.11.07 14:26:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.116/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 116/2024 LW- 4 PW- 4

| | |
|---|---|
| Name | : வெள்ளாண்டி (கேள்விப்பட்ட சாட்சி) |
| Father's/Husband's Name | : ராமசாமி |
| Village | : கொரசினம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 60/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of November 2025

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் மருமகன், அ.சா.2 என் மகள். ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் என் மகளும், மருமகனும் எங்கள் ஊருக்கு காதுகுத்து விசேஷத்திற்கு வந்துவிட்டு இருசக்கர வாகனத்தில் திரும்பி சென்றார்கள். பின்னர் நத்தம் தாண்டியதும் பள்ளப்பட்டி பிரிவில் சென்றபோது, என் மகள் அணிந்திருந்த 2 பவுன் தங்கசெயினை திருட மறித்து திருடி சென்றதாக சொன்னார்கள். என் மகளுக்கு படபடப்பாக இருப்பதாகவும், உடம்புக்கு முடியவில்லை என்று சொன்னதால் மீண்டும் வீட்டிற்கு அழைத்து வர சொன்னேன். பின்னர் இரவு எங்கள் வீட்டில் தங்க வைத்துவிட்டு மறுநாள் காலையில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலீசார் என் மருமகன், மகள் காவல் நிலையத்தில் இருக்கும்போது விசாரித்தார்கள். நான் வெளியில் இருந்ததால் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. யாருக்கு காதுகுத்து விசேஷம் நடந்தது என்றால் சொந்தக்காரருக்கு நடந்தது, எனது வீட்டில் நடக்கவில்லை என்றால் சரிதான். எனது கொழுந்தியாள் பழனியம்மாள் வீட்டில் விசேஷம் நடந்தது. பத்திரிக்கை வைத்தார்களா என்றால் வெத்தலை பாக்கு வைத்து அழைத்தார்கள். நான் சொல்வது போல் விசேஷம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் எனது மருமகன் மற்றும் மகள் எனது ஊருக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.11.07 14:26:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்